www.padippakam.com



# கோட்டையை வெற்றிகொண்டு சிங்களவர் கர்வம் அடக்கிய செகராச சேகரன்

20

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

குடாநாட்டில் இருந்த பெண்ணரசு எப்போது முடிவுக்கு வந்தது - குணபூசன சிங்கையாரியன் எப்போது தனது தாயிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொ-ண்டான் என்கிற விபரம் கிடைக்கப் பெறவில்லை.

குணபூசனுக்குப் பின் அவன் மகன் வீரோதயசிங்கை ஆரியன் 'பரராசசேகரன்' என்னும் பட்டத்துடன் ஆட்சிபீடமேறினான்.

இவனது ஆட்சிக்காலத்தில் நாட்டில் குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் குழப்பங்களும் சண்டைகளும் மிகுந்திருந்தன. வன்னிப் பிரதானிகள் - ஏற்கனவே சிங்கைநகர் அரசர்களுக்கு கீழ்ப்படிந்து திறை செலுத்திக்கொண்டிருந்த சிங்கள அரசர்களுடன் சேர்ந்து வீரோதயனது ஆட்சிக்கு எதிராக கலகம் செய்தார்கள்.


சிங்கை நகர் அரசனான வீரோதய சிங்கையாரியனுக்கு எதிராக கலகத்தை தூண்டிய சிங்கள அரசர்களில் - கோட்டை அரசனான அளகைக்கோன் என்கிற அளகேஸ்வரன் முக்கியமானவன்.

இவன் - சிங்கள அரச பரம்பரையைச் சேர்ந்தவனல்ல. கம்பளையிலிருந்து சிங்கைநகர் அரசர்களுக்கு திறை செலுத்திக் கொண்டு அரசாண்ட மூன்றாம் விக்கிரமபாகுவுக்கு மந்திரியாகவும் - படைத்தலைவனாகவும் இருந்தவன். இவனது பூர்வீகம் - தென் இந்தியா அல்லது தமிழ்நாடாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. கி.பி. 1340-ம் ஆண்டு மூன்றாம் விக்கிரம பாகு வாரிசின்றி இறந்தவுடன் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய அளகைக்கோன் உருகுணை பிரதேசத்திலிருந்த சிங்கள அரசர்களையெல்லாம் தன் படை பலத்தால் வென்று, சிங்கைநகர் அரசர்கள் தன்னைத் தாக்காவண்ணம் - தற்காத்து தனி அரசு நடத்துவதற்காக - கம்பளையிலிருந்த தனது இராஜதானியை - இன்று கோட்டை என்று அழைக்கப்படும் - ஜெயவர்த்தனபுரக் கோட்டைக்கு மாற்றி அங்கு ஒரு புதிய நகரத்தை அமைத்தான்.


அந்தப் புதிய நகரத்தில் உறுதியான கோட்டை ஒன்றைக் கட்டி அதைச் சுற்றி நாற்புறமும் அகழிகள் வெட்டுவித்து - கற்களால் உயர்ந்த மதில்களும் - காவற் கோபுரங்களும் எழுப்பி அவற்றின் உச்சியிலிருந்து கற்பாறைகளை உருட்டி விடவும் - அம்புகளை எய்யவும் நெருப்புப் பந்தங்களை வீசவும் கூடிய பொறிகளை அமைத்து அதைப் பலப்படுத்தியதோடு - அக்கோட்டையின் நான்கு திசைகளிலும் விஷ்ணு, இலட்சுமணன், கந்தகுமாரன் (முருகன்) ஆகிய தெய்வங்களுக்கு கோயில்கட்டி வழிபாடு நடத்தியதாக சிங்கள வரலாற்று நூல்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

கி.பி. 1344-ல் சிங்கை நகரில் இருந்து சென்ற இபின் பட்டூ-ட்டா அளகைக்கோனைச் சந்தித்தபோது, தானே இலங்கை முழுவதற்கும் சக்கரவர்த்தி என அவனுக்கு பொய் சொல்லியிருந்தான். சிங்கைநகர் அரசனது வலிமையையும், கடற்பலத்தையும், சிறப்பையும் நேரடியாகப் பார்த்து உணர்ந்திருந்த இபின் பட்டூட்டா அளகைக்கோனின் இந்தப் பொய்யுரையை நம்பவில்லை.

அளகைக்கோனின் தூண்டுதலால் வன்னிப்பிரதேசத்தில் உருவாகியிருந்த கலகங்களையும் குழப்பங்களையும் அடக்க சிங்கை நகரிலிருந்து பெரும் படையுடன் புறப்பட்டுச் சென்ற வீரோதய சிங்கையாரியன் -அக் கலகங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாயிருந்த வன்னியத் தலைவர்களைத் தண்டி-த்து - அவர்களுடைய பொரு-ட்களையும் ஏனைய செல்வங்களையும் கைப்பற்றியதோடு - இந்தப் படையெடுப்பின்போது,




ஜெயவீரன் கால இலங்கை



சேது நாணயங்கள்

தன் பக்கம் நின்று தனக்கு உதவிபுரிந்த ஓமந்தையைச் சேர்ந்த வன்னியச் சிறு பிரதானி ஒருவனுக்கு (அவன் பெயர் தெரியவில்லை) சிற்றரசுப் பட்டம் கட்டி, மற்றைய வன்னியர்கள் அனைவரும் அவனது அதிகாரத்துக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

ஓமந்தைப் பிரதானிக்கு அரசுரிமைப் பட்டம் கட்டிய இந்தச் செய்தி பற்றிய குறிப்பு:

**பாய்மாவு நிதிக்குலமும்**
**பட்டமுநீ டரசுரிமைப்**
**பதியுமிக்க**
**தேமாலை புனைபுயத்தோ**
**மந்தையர் கோன்றனக் களித்த**
**சிங்கை வேந்தன்.**

என செகராசசேகர மாலை சிறப்பாயிரத்தில் காணப்படுகிறது.

கி.பி. 1380-ம் ஆண்டளவில் ஒருநாள் வீரோத சிங்கையாரியன் இரவு படுக்கச் சென்றவன் - மறுநாள் காலையில் அவனது படுக்கையில் இறந்துகிடக்கக் காணப்பட்டான். அவன் யாரோ எதிரிகளால் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனற ஐயப்பாடு - தமிழ் வரலாற்று ஆசிரியர்களிடத்தில் உண்டு.

அவனது மரணத்திற்குப் பின் அவனது மூத்த மகன் ஜெயவீர சிங்கையாரியன் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனானான்.

இவன் காலத்தில், குறிப்பாக, கி.பி. 1386 இல், கோட்டை அரசன் அளகைக்கோனிடம் திறை பெற்றுவருமாறு இவன் அனுப்பிய ஏவலாளர்களை அளகைக்கோன் தூக்கிலிட்டுக் கொன்று திறை செலுத்த மறுத்துவிட்டான்.

இதைக் கேள்விப்பட்டு பெரு-ங்கோபம் கொண்ட ஜெயவீர சிங்கையாரியன் அளகைக்கோனின் செருக்கை அடக்குவதற்காக தமிழ்நாட்டிலிருந்தும் படை உதவிபெற்று தன்னுடைய படைகளையும் சேர்த்து ஒரு இலட்சம் படைவீரர்களைத் திரட்டி அதில் ஒரு பகுதியை கடல் மார்க்கமாகவும் - மறு பகுதியை வன்னி, மாத்தளை, கம்பளை வழியாக ஒரே நேரத்தில் இருமுனைகளில் அளகக்கோனைத் தாக்கும்படி அனுப்பினான்.

தரைவழியாகச் சென்ற சிங்கைநகரப் பெரும்படை மாத்தளைக்கு வந்த செய்தி அறிந்த கம்பளை அரசன் புவனேகபாகு தன்னுடைய இராஜதானியை விட்டு றயிகமை என்னுமிடத்திற்கு ஒளித்தோடிவிட்டான்.

கடல் மார்க்கமாகச் சென்ற படை நீர்கொழும்பு, கொழும்பு, பாணந்துறை ஆகிய இடங்களில் தரையிறங்கி தெமட்டகொடையை மையமாக வைத்து, ஒருபுறம் - வத்தளை நீர்கொழு-ம்பு வரையிலும் - மறுபுறம் இரத்மலானை பாணந்துறை வரையிலும் அணிவகுத்து நின்றது.

அக்கால வரலாற்றைச் சொல்லும் சிங்கள நூல்கள் இப்படையெடுப்பைப் பற்றிக் குறிப்பிடுகையில், இப் படைகளின் எண்ணிக்கையும், ஆர்ப்பரிப்பும் பெரும் சமுத்திரத்தை ஒத்ததாக இருந்ததென்றும், அளகைக்கோன் - இப்படைகளை அடித்து சிதைத்து நிர்மூலமாக்கிவிட, அதற்குத் தலைமை தாங்கிவந்த சிங்கை அரசன் (ஜெயவீர சிங்கையாரியன்) பெண்ணைப் போல் பயந்து ஓட மலைநாட்டு வாசிகள் ஒன்று திரண்டு அவனைப் பிடித்து ஈட்டியால் குத்திக் கொன்று விட்டதாக் வீரப்பிரதாபம் பேசியுள்ளது.

ஆனால், கேகாலைப் பகுதியில் கோட்டகம என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட செகராசசேகரன் என்ற ஜெயவீரனுடைய கல்வெட்டு அவனது வெற்றி பற்றிச் சொல்கிறது.

**"கங்கணம் வேற் கண்ணிணையாற்**
**காட்டினார் காமர்வளைப்**
**பங்கயற்கை மேற்றிலதம் பாரித்தார்**
**- பொங்கொலி நீர்ச்**
**சிங்கைநகராரியனைச் சேராவனுரேசர்**
**தங்கள் மடமாதர் தாம்"**

என்று மேற்படி கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கும் வெண்பாவைக் கொண்டும், இக் கல்வெட்டின் கால அளவைக் கொண்டும் இந்தப் போரில் ஜெயவீரனே வெற்றி பெற்றான் என்றும் அளகைக்கோன் கொல்லப்பட்டானென்றும் உறுதி செய்ய முடிகிறதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார்.

இதுதவிர சிங்கள வரலாற்று நூல்கள் பொய்யுரைக்கின்றபடி, இந்தப் போரில் ஜெயவீர சிங்கையாரியன் கொல்லப்பட்டிருந்தால் சிங்கைநகர் - கோட்டை அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கும். ஆனால், கி.பி. 1450-ம் ஆண்டு சபுமல் குமரய என்கிற 'செண்பகப் பெருமாள்' சிங்கை நகரை வெற்றிகொள்ளும் வரை அது கோட்டை இராச்சியத்திடமிருந்து திறை பெற்று வந்திருக்கிறதே அன்றி அதற்கு ஒருபோதும் திறை கொடுத்ததில்லை.

உண்மையில், அளகைக்கோனாரைக் கொன்று கோட்டை இராச்சியத்தை வெற்றிகொண்ட பின் இலங்கை முழுவதற்கும் ஜெயவீர சிங்கையாரியனே சக்கரவர்த்தியாக இருந்தான். இவனே 'செகராசசேகரம்' என்னும் வைத்திய நூலையும், 'செகராசசேகர' மாலை என்னும் சோதிட நூலையும், காரிவையாரின் 'கணக்கதிகாரம்' என்னும் கணித நூலையும் இயற்றுவித்ததாகச் சொல்லப்படுகிறது.

வைத்திய நூலின் சர்ப்பசா-த்திரப் பிரிவின் 8ம் பாட்டில் "இலங்கை வேந்தர் சீரிய பொன் திறையளக்கச் செங்கோலோச்சுஞ் செகராசசேகரன் சிங்கை மேவுமாரியர் கோன்" என இவனது புகழ் பாடப்பட்டிருக்கிறது.

இவன் காலத்திலேயே விடையும் (எருது) பிறையும் - பொறிக்கப்பட்ட நாணயங்கள் முன்பிருந்த வடிவத்திலிருந்து சீர்திருத்தி அச்சுப்பொறித்து வெளியிடப்பட்டது.

**- நக்கீரன்**

படிப்பகம்